உ

கடவுள் துணை.

# பாம்பாட்டிசித்தர் பாடல்.



374
பாம்பாட்டிச் சித்தர்
பாடல்

சென்னை-சூளை.

பு. முனிசாமி நாயுடு

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

உ

கடவுள் துணை.

# பாம்பாட்டி சித்தர் பாடல்.



சென்னை-சூளை.

பு. முனிசாமி நாயுடு

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

சிவமயம்.

# பாம்பாட்டி-சித்தர் பாடல்.

## கடவுள் வணக்கம்.

தெளிந்துதெளிந்துதெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடுபாம்பேதெளிந் தாடுபாம்பே-சிவன்
அடியிணைகண்டோமென் றாடுபாம்பே.

நீடுபதநமக்கென்றுஞ் சொந்தமென்றே
நித்தியமென்றேபெரு முத்தியென்றே-
பாடுபடும்போதுமர்தி பதமினைந்தே
பன்னிப்பன்னிப்பரவிநின் றாடுபாம்பே.

பொன்னிலொளிபோலவெங்கும் பூரணமாய்ப்
பூவின்மணம்போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளடிவணங்கிநின் றாடுபாம்பே.

எள்ளிலெண்ணெய்போலவுயி ரெங்குநிறைந்த
ஈசன்பதவாசமல ரெண்ணியெண்ணியே
உள்ளபடியன்புபத்தி யோங்கிநிற்கவே
ஒடுங்கியடங்கித்தெளிந் தாடுபாம்பே.

அண்டபிண்டநதந்தவெங்க ளாதிதேவனை
அகல்லாமலேநினைத் தன்புடன்பணிந்
தெண்டிசையும்புகழ்ந்திட வேத்தியேத்தியே
ஏகமனமாகநாடி யாடுபாம்பே.

சாதிமயமானபரி சுத்தவஸ்துவைத்
தாழுதழுதாவலறித் தொந்தோமெனவே
திதவருவழியி னின்றுநிலையாய்
ணைந்துநினைந்துருகி யாடுபாம்பே. ௬

ருவாயுமுருவாயு பக்தியாயும்
ந்தமாயுமொளியாயு மாகமமாயும்
ருவாயுங்குருவாயுஞ் சீவனுயும்
சறிந்தவஸ்துவைப்போற்றி யாடுபாம்பே. ௭

ட்டிக்காட்டவொண்ணாத பாழ்சூனியந்தனைச்
நட்சமதியாலறிந்து தோஷமறவே
ட்டிபிடித்தோமென் றுனந்தபாம்பை
யெடுத்துவிடுத்துநின் றுடுபாம்பே. ௮

வ்வுயிருமெவ்வுலகு மீன்றும்புறம்பாய்
ருந்துவிளையாட் டெய்தியும்பின்னர்
வ்வுயிருமவ்வுலகு மாகியுநின்ற
னந்தவெள்ளங்கண் டாடுபாம்பே. ௯

குரு வணக்கம்.

ாற்றுமுடல்பொருளாவி தத்தமாகவே
ானம்வாங்கிநின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றிமனம்வாக்குக்காய மூன்றும்பொருந்தப்
புகழ்ந்துபுகழ்ந்துநின் றுடாய்பாம்பே. ௰

பொய்மதங்கள்போதனைசெய் பொய்க்குருக்களைப்
புத்திசொல்லிநன்னெறியிற் போகவிடுக்கும்
மெய்மறந்தானின்னதென்று மேவவிளம்பும்
மெய்க்குருவின்பாதம்போற்றி யாடாய்பாம்பே. ௧௧

வேதம்பொருளின்னதென்றும் வேதங்கடந்த
மெய்ப்பொருளைக்கண்டுமன மேவுவிரும்பிப்
போதப்பொருளின்னதென்றுப் போதனைசெய்யும்
பூரணசற்குருதாள்கண் டாடாய்பாம்பே. ௧௨

உள்ளங்கையிற்கனிபோல உள்ளபொருளை
உண்மையுடன்காட்டவல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந்தன்னைத்தள்ளி கண்டுகொண்டன்பாய்க்
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே. ௧௩

அங்கையிற்கண்ணாடிபோல் வாதிவஸ்துவை
அறிவிக்குமெங்களுயி ரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
தனிவப்படமெடுத் தாடுப்பாம்பே. ௧௪

காயநிலையழிகையைக் கண்டுகொண்டபின்
கற்புநிலையுள்ளிற்கொண் டெக்காலமும்வாழும்
தூயநிலைகண்டபரி சுத்தகுருவின்
துணையடிதொழுதுநின் றாடாய்பாம்பே. ௧௫

கூடுவிட்டுக்கூடுபாயுங் கொள்கையுடையே
குருவின்வல்லபமெவர் கூறவல்லவர்
வீடுபெறும்வகையை மேன்மேலுங்காட்டு
மெய்க்குருவைப்பணிந்துநின் றாடாய்பாம்பே. ௧௬

அட்டதிக்குமண்டவெளி யானவிடமும்
அடக்கியருளிகையோ டாடிவிரையாய்
வட்டமிட்டுவலம்வரும் வல்லகுருவின்
மலரடிதஞ்சமென் றாடாய்பாம்பே. ௧௭

கற்பகாலங்கடந்தாதி கர்த்தாவோடுங்
கூடமழியாதுவாழுங் காரணக்குரு

பொற்பதமேதஞ்சமென்று போற்றுதல்செய்து
பூரணசிகதையோ டாடாய்பாம்பே. ௧௮

வச்சிரத்திற்கோர்பழுது வாய்க்குமாயினும்
வல்லுடம்புக்கோர்குறை வாய்த்திடாது
மெச்சுகடமுள்ளவெங்கள் வேதகுருவின்
மெல்லடிதுதித்துநின் றாடாய்பாம்பே. ௧௯

## பாம்பினது சிறப்பு.

நாதர்முடிமேலிருக்கு நாகப்பாம்பே
நச்சிப்பையைவைத்திருக்கு நல்லபாம்பே
பாதலத்திற்குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப் பாடிநின் றுவிளை யாடுபாம்பே. ௨௦

வளைபுகும்போதேதலை வாங்கும்பாம்பே
மண்டலமிட்டுடலவளை வண்ணப்பாம்பே
தனைக்கஞ்சிநின்றிடும் சத்தியப்பாம்பே
தலையெடுத்தேவிளை யாடுபாம்பே ௨௧

குற்றமற்றசிவனுக்கு குண்டலமானாய்
கூறுந்திருமாலினுக்குக் குடையானாய்
கற்றைக்குழம்பார்வதிக்கு கங்கணமானாய்
காவாமலுளங்களித் தாடுபாம்பே. ௨௨

மண்டலத்தைத்தாங்குமிகு வல்லமைகொண்டாய்
மாயனுக்கும்படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபடைநடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக்கொண்டா யாடுபாம்பே. ௨௩

சந்திரனைச்சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந் தானுமாகினாய்
மந்திரத்திற்கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்துநின் றாடுபாம்பே. ௨௪

சித்தர் வல்லபங்கூறல்.

எட்டுநாகந்தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனுருலகத்தை யிங்கேகாட்டுவோம்
கட்டுக்கடங்காதபாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந்தன்னைக்கக்கி யாடுபாம்பே. உரு

ஆதிசேடனுகினுமெம் மங்கையினலே
ஆட்டிவிடுவோமெங்க ளாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றிடச்செய்வோம்
நின்றநிலைதவராம லாடுபாம்பே. உசா

தூணைச்சிறுதுரும்பாக தோன்றிடச்செய்வோம்
துரும்பைப்பெருந்தூணுக தோற்றச்செய்குவோம்
ஆணைப்பெண்ணும்பெண்ணையாணுமாகச்செய்குவோம்
ஆரவாரத்தெதிராய்நின் றுடுபாம்பே உஎ

எட்டுமலைகளைப்பந்தா யெடுத்தெறிகுவோம்
ஏழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம்
மட்டுபடாமணலையு மதித்திடுவோம்
மகராஜன்முன்புநின் றுடுபாம்பே. உஅ

மண்டலமுற்றுங்கையான் மறைத்திடுவோம்
வானத்தையும்வில்லாக வளைத்திடுவோம்
தொண்டருக்குருனியஞ் சொல்லுக்காட்டுவோம்
தோன்றலுக்குமுன்புநின் றுடாய்பாம்பே. உகூ

மூண்டெரியுமக்கினிக்குள் மூழ்கிவருவோ
மூந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம்
தாண்டிவரும்வன்புலியைத் தாக்கிவிடுவோம்
தார்வேந்தர்முன்புநின் றுடுபாம்பே. கூ௦

செப்பரியமூன்றுலகுஞ் செம்பொன்னுக்குவோம்
செங்கதிரைத்தன்கதிராய்ச் செய்துவிடுவோம்

இப்பெரியவுலகத்தை இல்லாமற்செய்வோம்
எங்கள்வல்லபங்கண் டாடுபாம்பே. ௩௰க

வேதன்செய்தசிருஷ்டிகள்போல் வேறுசெய்வோம்
வேதனையுமெங்கள்கீழே மேவச்செய்வோம்
நாதனுடன்சமமாக நாங்களும்வாழ்வோம்
நாங்கள்செய்கைஇதுவென் றூடாய்பாம்பே. ௩௰உ

அறுபத்துநாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமேலொருகலை யானதறிந்தோம்
மறுபற்றுசற்றுமில்லா மனமுடையோம்
மன்னனேயாசானென் றுடுபாம்பே. ௩௰௩

சீறுபுலியானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குற்றேவல் செய்யச்சொல்லுவோம்
வீறுபெருங்கடவுளை யெங்களுடனே
விளையாடச்செய்வோமென் றூடாய்பாம்பே. ௩௰௪

சித்தர் சம்வாதம்.

வாசுகியையொருபக்க மன்னநிறுத்து
மகத்தானபதுமனை மறுபக்கம்வை
தேசுலவுதக்கனைத் தன்றிக்கிற்சேரு
செய்யபதுமனைக்கொள் சித்தனுரே. ௩௰௫

அனந்தனையொருபக்க மாகநிறுத்தி
அதன்பக்கங்குளிகனை யண்டச்சேரு
கனங்கொண்டகார்கோடகன் காணக்காட்டுங்
கடுஞ்சங்கபாலனைத்தா சித்தனுரே. ௩௰௬

அட்டதிக்குஞ்சக்கரங்க ளாகக்கீறி
அக்கோணநிலைகளி லக்கரஞ்சேரு
திட்டமுடன்மந்திரத்தைச் செபித்துநில்லு
சித்தந்தடுமாறுதே சித்தனுரே. ௩௰எ

அட்டதிக்குஞ்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
அவ்வவற்றிற்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
எட்டுகோசமிருக்கின்ற விடத்தில்விட்டோம்
இனியென்னசெய்வதுசொல் சித்தனாரே. ௯௮

நடுவாகவாதிசேடன் றன்னைநாட்டு
நான்குதிக்குமந்திரித்த நீறுதூவு
கடுவிஷங்கக்கலே கட்செவிகளைக்
கையிலெடுத்தாடுங்கள் சித்தனாரே. ௯௯

## பொருளாசை விலக்கல்.

நாடுநகர்வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுது நாடிவருமோ
கூடுபோனபின்பவற்றாற் கொள்பயனென்னோ
கூத்தன்பதங்குறித்துநின் றாடாய்பாம்பே. ௱

யானைசேனைதேர்பரி யாவுமணியாய்
யமன்வரும்போதுதுணை யாமோவறியாய்
ஞானஞ்சற்றுமில்லாத நாய்கட்குப்புத்தி
நாடிவரும்படிநின் றாடுபாம்பே. ௱௧

மாணிக்கமாமணிமுடி வாகுவலயம்
மார்பிற்றுலங்கும்பதக்கங்கண் மற்றும்பணிகள்
ஆணிப்பொன்முத்தாரம்பொ னந்தக்கடகம்
அழிவானபொருளென் றாடாய்பாம்பே. ௱௨

மாடகூடமாளிகைகள் வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்தவரமனை மற்றுமுள்ளவை
கூடவாராதென்றவந்தக் கொள்கையறிந்தோர்
குலவாமல்வெறுப்பாரென் றாடாய்பாம்பே. ௱௩

மலைபோன்றசெய்பொற்கு வைத்திருப்பவர்
மறலிவருகையில் வாரிச்செல்வரோ

அலையாமலகத்தினை யத்தன்பால்வைத்தோர்
அழியாரென்றே துணிந் தாடாய்பாம்பே. சச

பஞ்சணையும்பூவணையும் பாயலும்வெறும்
பாழ்சுடுகாடதனிலே பயன்பெறுமோ
மஞ்சள்பணம்பேய்சுடு நாறுமணங்கள்
வருமென்றுதெளிந்துநின் றாடாய்பாம்பே. சரு

முக்கனியுஞ்சர்க்கரையு மோதகங்களும்
முதிர்சுவைப்பண்டங்களு முந்தியுண்டவா
மிக்கவுயிர்போனபின்பு கண்ணைவிழுங்க
மெய்யாகக்கண்டோமென் றாடாய்பாம்பே. சசு

வண்ணப்பட்டும்வாசனையும்'வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன்யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவரமாட்டாயென் றாடாய்பாம்பே. சஎ

மக்கள்பெண்டீர்சுற்றமரு மக்கண்மற்றவர்
மாளும்போதகூடவவர் மாள்வதில்லையே
தக்கவுலகனைத்தையுந் தந்தகர்த்தனைத்
தாவித்தாவித்துதித்துநின் றாடாயபாம்பே. சஅ

கானலைமானீரெனவே கண்டுசொல்லல்போல்
காசினிவாழ்வினைமூடர் கண்டுகளிப்பார்
மேனிலைகண்டார்கள்வீணாய் வீம்புபேசிடார்
மெய்யன்பதநாடுவாரென் றாடாய்பாம்பே. சகூ

பெண்ணாசை விலக்கல்.

வெயில்கண்டமஞ்சள்போன்ற மாதரழகை
விரும்பியேமேல்விழுந்து மேவுமாந்தர்
ஒயில்கண்டயிலவுகாத் தோடுங்கிளிபோல்
உடல்போனலோடுவாரென் றாடாய்பாம்பே. ருய

செண்டுமுலைவண்டுவிழி கொண்டதோகையைச்
சித்தப்பாமபாலவிழுங்கியேசீயென்றொருத்தாம்
குண்டுகட்டெருமையேறுங் கூற்றுப்பருந்தைக்
கொன்றுதின்றுவிட்டோமென் றூடாய்பாம்பே. ருக

வட்டமுலையென்றுமிக வற்றுந்தோலை
மகமேருவென்றுவமை வைத்துக்கூறுவர்
கெட்டநாற்றமுள்ளயோனிக் கேணியில்வீழ்ந்தார்
கெடுவரென்றேதுணிந் தாடாய்பாம்பே. ருஉ

மலஞ்சொரிகண்ணைவாடி வாளுக்கொப்பாக
வருணித்துச்சொல்வர்மதி வண்மையில்லாதார்
குலநலம்பேசுகின்ற கூகைமாந்தர்கள்
கும்பிக்கேயிரையென் றூடாய்பாம்பே. ருங

சிக்குநாறுங்கூந்தலைச் செழுமேகமாய்ச்
செப்புவார்களகொங்கைதனைச் செப்புக்கொப்பதாய்
நெக்குநெக்குருகிப்பெண்ணை நெஞ்சினினைப்பார்
நிமலனைநினையாரென் றூடாய்பாமபே. ருச

நாறிவருமெச்சிறனை நல்லமுதென்றும்
நண்ணுஞ்சனிநாசிதனை நற்குமிழென்றும்
கூறுவார்கள்புத்தியில்லாக் கூகையாந்தர்
கோனிலையையறியாரென் றூடாய்பாம்பே. ருரு

மயிலென்றுங்குயிலென்று மாணிக்கமென்றும்
மானேயென்றுந்தேனேயென்றும் வானமுதென்றும்
ஒயிலானவன்னமதிற் கொத்தவளென்றும்
ஓதாயற்கடித்துவிட் டாடுபாம்பே. ருசு

மின்னிற்கொடியென்றுஞ்சோதி விளக்கமென்றும்
மெல்லியென்றும்வல்லியென்று மேனகையென்றும்

கன்னற்கட்டியென்றுஞ்சீனி கற்கண்டென்றும்
கழறுமற்கடிந்தோமென் றாடாய்பாம்பே. ருஎ

பூவையென்றும்பாவையென்றும் பொன்னேயென்று
பூந்திருவேயென்றுமென்றன் பொக்கிஷமென்றும்
கோவையென்றுங்கோதையென்றுங் கோகிலமென்று
கூறுமற்றுறந்தோமென் றாடாய்பாம்பே. [ம்

மலக்குடமீதிலே மஞ்சள்பூச்சென்றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல் வண்ணத்தோலென்றும்
சலக்குழிக்குள்ளேநாற்றஞ் சார்ந்தசேறென்றும்
தானறிந்துதள்ளினேமென் றாடாய்பாம்பே. ருகூ

சரீரத்தின் குணம்.

ஊத்தைக்குழியிலே மண்ணையெடுத்தே
உதிரப்புனலிலே யுண்டைசேர்த்தே
வாய்த்தகுயவனார் பண்ணுபாண்டம்
வரவோட்டுக்குமாகாதென் றாடாய்பாம்பே. சுய

இருவர்மண்சேர்த்திட வொருவர்பண்ணை
ஈரைந்துமாதமாய் வைத்தகுளை
அருமையாயிருப்பினு மந்தக்குளை
அரைக்காசுக்காகாதென் றாடாய்பாம்பே. சுக

பரிபாசம்போலவே கடித்தபாம்பு
பலபேரறியவே மெத்தவீங்கிப்
பரியாரமொருமாது பார்த்தபோது
பையோடேகழன்றதென் றாடாய்பாம்பே. சுஉ

சீயுமலமுஞ்செந் நீருநிணமுஞ்
சேர்ந்திடுநாற்றங் குடமுடைந்தால்
நாயுநரியும் பேயுங்கழுகும்
நமதென்றேதின்னுமென் றாடாய்பாம்பே. சுங

நித்தியமென்றுமலையினின்றுகொண்டோம்யாம்
நினைத்தபடிமுடித்துநின்மலமானோம்
சத்தியமாவெங்கள்கடந்தானழியாதே
சந்ததமும்வாழ்வோமென்றாடாய்பாம்பே. ௭௭

மனமென்குதிரையைவாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம்வாயிற்பூட்டிச்
சினமென்னுஞ்சீனிமேற்சீராயேறித்
தெளிவிடஞ்சாரிவிட்டாடாய்பாம்பே. ௭௮

ஆசையென்னுஞ்செருப்பின்மேலடியைவைத்தே
ஆங்காரமுட்காட்டையறமிதித்தே
பாசையெனுந்தூற்றுணத்திற்கனல்கொளுத்திக்
காலாகாலங்கடந்தோமென்றாடாய்பாம்பே. ௭௯

காலனெனுங்கொடிதான கடும்பகையைக்
கற்பமெனும்வாளினாற் கடிந்துவிட்டோம்
சாலப்பிறப்பினைத் தான்கடந்தோம்
சுறபரங்கண்டோமென்றாடாய்பாம்பே. ௮௰

தேனில்வீழ்ந்தயீயைப்போலச் சிந்தைகுலைந்து
சிகையாயச்சிற்சொரூப தெரிசனைகண்டு
வானிற்பறந்திடச்சூத வான்மணிதீர்ந்து
வாயிற்போட்டேகநின்றாடாய்பாம்பே. ௮௧

பாக்கியபாதங்கண்டேன் சோதிகண்டேன்
சுத்தவெளிக்குள்ளேயொரு கூத்தன்கண்டேன்
தாக்கியசிரசின்மேல் வைத்தபாதம்
சற்குருவின்பாதமென்றாடாய்பாம்பே. ௮௨

ஆலப்பொந்திலே வாழ்ந்தபாம்பே
அரசடிப்பொந்திலே புகுந்துகொண்டாய்

வாலடி தன்னிலே பார்த்துபார்த்து
வாங்கியேதூங்கிநின் றாடாய்பாம்பே. ௮௩

நாலுதெருவிலே நாலுகம்பம்
நடுத்தெருவிலே பொன்கம்பம்
போலும்விளங்குபொன் கம்பத்தினுக்கே
பூமாலைசூட்டிநின் றாடாய்பாம்பே. ௮௪

ஆழிபெயர்ந்தாலுமேரு மட்டேயலையும்
அடியோடுபெயர்ந்தாலு மன்றிக்கால்
ஊழிபெயர்ந்தாலுமதி யுண்மைபடிக்கே
உறுதிபெற்றுநின் றாடாய்பாம்பே. ௮௫

வாயுவினையிரையாக வாங்கியுண்டே
வருடிக்குநீரினை வாயுள்மடித்தே
தேயும்பிறைகுளிர்காய்ந்து வெட்டவெளியில்
திகைப்பறச்சேர்ந்துநின் றாடாய்பாம்பே. ௮௬

மாசில்கதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெரும்பட மடல்விரித்தே
ஆதில்பராபரமான் வாதிபாதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்பாம்பே. ௮௭

காடுமலைநதிபதி காசிமுதலாய்
கால்கடுக்கவோடிற்பலன் காணலாகுமோ
வீடுபெறும்வழியினை மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் றாடாய்பாம்பே. ௮௮

எள்ளளவுமன்பகத்தி லில்லாதார்முத்தி
எய்துவதுதொல்லுலகி லில்லையெனவே
கள்ளப்புலன்கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித் தாடாய்பாம்பே. ௮௯

சூரியனைக்கண்டபனி தூரவோடல்போல்
சொந்தபந்தஞ்சிந்தபரி சுத்ததலத்தில்
ஆரியனைக்கண்டுதெரி சித்தேயன்புடன்
அகலாமற்பற்றிதொடர்ந் தாடாய்பாம்பே. ௬௰

சாந்தம்வலியிரும்புபோல் மாசின்மனதைக்
காட்சியானவஸ்துவுடன் கலக்கச்சேர்த்துச்
சாந்தமுடன்றோண்டியின் தாம்புபோலச்
சலியாமற்றொடர்ந்துநின் றாடாய்பாம்பே. ௬௧

உளியிட்டகற்சிலையி லுண்டோபலன்கள்
உலகத்தின்மூடர்களுக் குண்டோவுணர்ச்சி
புளியிட்டசெம்பிற்குற்றம் போமேவஞ்ஞானம்
போகாதுமூடர்க்கென் றாடாய்பாம்பே. ௬௨

இருளானபோரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காதுதேசாசார தேசிகர்தம்மால்
அருளானமூலகுரு வையர்செயலால்
ஆனந்தங்கண்டோமென் றாடாய்பாம்பே. ௬௩

எட்டுச்சுரக்காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தலில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி நாளும்புசித்தே
நாதன்பாதங்காணார்களென் றாடாய்பாம்பே. ௬௪

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறைப்பார்
தன்னையறியாதவரே தன்னைக்காட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றாடாய்பாம்பே. ௬௫

பாயிற்சுவைபோலுமெங்கும் பாய்ந்தவொளியைப்
பற்றுப்பொன்மற்றவைத்த பான்மைபோலே

காலிற்கழிமுனைதின்று கண்டுகொண்டு
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே ௬௬

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தங்கொண்டவித் தேசவாழ்வினை
ஒக்காளமென்றெண்ணி யோகயுடனே
உள்ளத்தெளிந்துநின் றாடாய்பாம்பே ௬௭

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரம்புராணங்கலை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேறுநூல்களும்
வீணான நூல்களென் றாடாய்பாம்பே ௬௮

சமயபேதம்பலவான சந்திபேதங்கள்
சகத்தோர்க்கேயல்லாது சற்சாதுக்களுக்கோ
சிவமயத்திலேறினோர் சித்தமாருமோ
சித்தர்சித்தாந்தத்தேர்ந் தாடுபாம்பே ௬௯

பூசைசெய்ததால் சுத்த போதம்வருமோ
பூமிவலஞ்செய்ததனாற் புண்ணியமுண்டோ
ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்றுதுணிந் தாடாய்பாம்பே ௭௰

மூலவேரறிந்துகொண்டால மூன்றுலகமும்
முன்பாகவேகண்டு நித்திய முத்திசேரலாம்
சாலவேரறிந்ததாலே தான்பயனுண்டோ
சகத்தைப்பொய்யென்றுதெளிந் தாடாய்பாம்பே ௭௧

சகத்தனாதியென்றிடாது தானனாதியாற்
சமைந்ததென்றுரைப்பார்கள் சத்தையற்றோர்
மகத்துவனில்கற்ப வன்மையில்லாது
மற்றும்வன்மையில்லையென் றாடாய்பாம்பே ௭௨

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லாநிறைந்திடு மற்புதசித்தர்
காயமில்லாதோங்கிவளர் காரணசித்தன்
கண்ணுளொளியானனென் றாடாய்பாம்பே. ௱௩

கற்பத்தழுக்கோணநிலை நாப்பணதாக
நாடுமங்காரச்சொரூப நாயகன்றனை
மேற்படுத்திக்கொண்டாலந்த மேனுலகெலா
மெல்லடிக்குத்தொண்டேயென் றாடாய்பாம்பே. ௱௪

கண்டவர்களொருக்காலு விண்டிடார்கள்
விண்டவர்களொருக்காலுங் கண்டிடார்கள்
கொண்டகோலமுள்ளவர்கள் கோனிலைகாணார்
கூத்தாடிக்கூத்தாடி யாடுபாம்பே. ௱௫

ஆறுகலைக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீடுபோகுமுன்னே யரண்கோலிக்கொள்
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாதுகொண் டாடுபாம்பே. ௱௬

எண்ணரியபுண்ணியங்க ளெல்லாஞ்செய்துமென்
ஏகனடிநெஞ்சமதி லெண்ணாவிடிலோ
பண்ணரியதவப்பயன் பத்தியில்லையேற்
பாழ்படுமென் றுணிந் தாடாய்பாம்பே. ௱௭

எவ்வுலகுஞ்சொந்தமதா யெய்தும்பயனென்று
எங்களாதிபதாம்புய மெண்ணுக்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேயறுமென்
றெண்ணிக்கர்த்தனடிநினைந் தாடாய்பாம்பே. ௱௮

மணக்கோலங்கொண்டபெண் மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்குகின்றாய்

பிணக்கோலங்கண்டபின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கே துணையென் றாடாய்பாம்பே. ௯௯

பிறப்பையுமிறப்பையு மறுத்திடவல்ல
பெருமருந் தொன்றுசொல்வேன் பெட்புடன்கேளாய்
திறப்புடன் மனப்பூட்டைத் திறந்துபார்த்துச்
சிறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே. ௱

இறந்தவரைவரவ ரிஷ்டமானவர்
எய்துயரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவரொருவரென்றே மண்ணினில்லோர்
வகையறிந்திட்டவென் றாடாய்பாம்பே. ௱௧

நான்கடிச் செய்யுள்.

அகாரமுதலிலே பிரம்மாக
ஆனந்தவயலிலே படம்விரித்தே
உகாரமுதலிலே யோர்ந்தெடுக்கி
ஓடிவகாரத்தி னுச்சியீட்டிச்
சிகாரங்கிடந்தோர் மந்திரத்தைச்
சித்தப்பிரானருள் போதஞ்செய்ய
மகாரப்பிறப்பையு மேலறுத்து
மாயப்பந்தங்கடந்தோமென் றாடாய்பாம்பே.

தந்திரஞ்சொல்லுவார் தம்மையறியார்
தனிமந்திரஞ்சொல்லுவார் பொருளறியார்
மந்திரஞ்செபிப்பார்கள் வட்டவீட்டினுள்
மதிலினைச்சுற்றுவார் வாயில்காணார்
அந்தரஞ்செல்லுமே வேர்பிடுங்கி
அருளென்னும்பானத்தா லுன்னைச்சேர்த்தே
இந்தமருந்தினைத் தின்பீராகில்
இனிப்பிறப்பில்லையென் றாடாய்பாம்பே.

குருவென்னுமாசா னுருவெடுத்துக்
குறியானஞானந் தப்பாக்கியாக்கி
அருளென்னுமருளே யுண்மையாக்கி
ஆனந்தமாகவே யதைக்கடந்தே
வருளென்னுமாதர்மந் நெறிதொட்டு
வாங்காமலெறிந்திட கெட்டையிட்டு
பருவலைக்குள்ளே பட்டதென்றே
பற்றுனைபற்றிநின் றாடாய்பாம்பே. ௱௨

கன்னான்குகையிலே காண்மறிப்போம்
கருமானுலையிலே தீமூட்டுவோம்
சொன்னார்தலையிலே பொன்னாக்குவோம்
சுருதியருகல்வி யொப்பஞ்செய்வோம்
பின்னார்கள்பாசத்தை விட்டெறிப்போம்
மெய்ப்பொருட்குறிகண்டு விருப்படைவோம்
பன்னாதேபன்னாதே சும்மாவிரு
பராபரஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே.(

சாதிப்பிரிவிலே தீமூட்டுவோம்
சந்தவெளியினிற் கோல்நாட்டுவோம்
வீதிப்பிரிவினில் விளையாட்டுவோம்
வேண்டாமதனையி லுறவுசெய்வோம்
சோதித்துலாவியே தூங்கவிடுவோம்
சுகமானபெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிபிரமாக்களைந்துபேரும்
அறியார்களிதையென் றாடாய்பாம்பே. ௱௨௩

கெட்டெழுத்ததனிலே நிலைபிடித்து
நீங்காவெழுத்திலே வாலைமுழுக்கி
விட்டவெழுத்திலே படம்விரித்து
விண்ணின்வழியிலே மேவியாடிப்

பட்டவெழுத்தையும் பதிந்திருப்போம்
பன்னிரண்டாமெழுத்தினிற் பன்னிக்கூடிய
திட்டமுடனெமக்கரு டேசிகனார்தன்
சீர்பாதஞ்சேர்ந்தோமென் றூடாய்பாம்பே. ()

ஊசித்துளைக்குடத்தினிற் பாம்படைப்போ
மூலமெல்லாஞ்சுற்றி யுலாவிவருவோம்
மாசுள்ளபிறவியை மறந்திருப்போ
மனமொத்தவெளியிலே விட்டாட்டுவோம்
மாகப்புனல்களை யிறைகொடுப்போம்
மனதுற்றவுச்சியி லேறியாடுவோம்
பேசுமெழுத்தையும் விழுங்கவிடுவோம்
பிறப்பிறப்பற்றோமென் றூடாய்பாம்பே. ()

ஆணிக்குடத்திலே பாம்படைப்போம்
அக்கினிக்கோட்டைமே லேறப்பார்ப்போம்
மாணிக்கத்தூணின்மேல் விட்டாட்டுவோம்
மனம்வாக்குகாயத்தை யிரைகொடுப்போம்
நாணிக்கயிற்றையு மறுத்திடுவோம்
நமனற்றநாதன்பத நாடியேகிற்போம்
ஏணிப்படிவழிகண் டேறிவிடுவோம்
யாருமிதையறியாரென் றூடாய்பாம்பே.

வடக்குகிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ்சுழலிலே பாவுபூட்டுவோம்
நடக்கும்வழியிலே யுண்டைசேர்ப்போம்
நடவாவழியிலே புடவைசெய்வோம்
குடக்குக்கரையிலே கோல்போடுவோம்
கொய்தகையெங்குமே விற்றுவிடுவோம்
அடக்கியேகத்துளளே வைக்கவும்வல்லோம்
ஆதிபதங்கண்டோமென் றூடாய்பாம்பே. ()

ரூத்திரக்குடத்திலே பாம்படைப்போம்
சுழிமுனைக்குள்ளே சுகித்திருப்போம
பாத்திரங்கொண்டுமே பலியிரப்போம்
பத்தெட்டுமூன்று படிகடந்தோம்
ஊத்தைச்சடத்தினைப் புடமிடுவோம்
உளவனைமக்குநல் லுறுதிசொல்லப்
பார்த்துரையிதன்மெய் பலிக்கவெண்ணிப்
பதனம்பதனமென் றூடுபாம்பே. ௱உஅ

மவ்வக்குடத்திலே பாம்படைப்போம்
மணிவட்டவாசியை வாரியுண்போம்
பவ்வக்குடங்களைத் தள்ளிவிடுவோம்
வக்கிரசொர்ப்பனந் தாண்டிவிடுவோம்
பவ்வவெளியிலே விட்டாட்டுவோம்
பஞ்சகருவியைப் பலிகொடுப்போம்
சிவ்வுருவாகியே நின்றோமென்றே
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே. ௱உகூ

பாம்பாட்டிசித்தர் பாடல்.

முற்றிற்று.

